1969 மார்ச் 17]

ஆணையாளர்கள், நகராட்சிப் பொறியாளர்கள் போன்றவர்களெல்லாம் இப்பொழுதும் மாநில அளவிலே நியமிக்கப்படும் அதிகாரிகள். ஆனால் எந்த நகராட்சி ஆணையாளரும் தலைவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதாகவோ, ஆணையாளர் நகராட்சித் தலைவருக்கு அடங்காத நிலையோ இல்லை. டி-சென்ட்ரலைஸ்டு, அதிகாரத்தை ஒருவர்மேல் திணிப்பதற்காக ஏற்படவில்லை. அந்த அந்த பகுதிகளைக் கருத்திலே கொண்டு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றுதான் இது ஏற்படுத்தப்பட்டது. அந்த வகையிலே ஏற்பட்டதுதான்; அதிகாரத்தைப் பயன்படுத்த அல்ல. ஒரு வேளை ராஜபாளையத்தை 'வேட்டிக்கன் சிட்டி' மாதிரி தனியாக அமைக்கவேண்டுமென்று உறுப்பினர் நினைத்தால், காலம் கனிந்துவரும் வரை அவர் காத்திருக்கவேண்டும். அதுவரை மக்களும் உறுப்பினரைத் தலைவராக வைத்திருக்கவேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குத் தணிக்கை

* 366—வினா: திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் வரவு-செலவுகளை தணிக்கை (Audit) செய்யப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், வருடத்துக்கு எத்தனை முறை?

(உ) குளித்தலை வட்டம், கிருஷ்ணராயபுரம ஊராட்சி ஒன்றியத்தின் வரவு செலவு எப்போது தணிக்கை செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ஊராட்சி ஒன்றிய வரவு-செலவு கணக்குகள் அரையாண்டுக்கு ஒருமுறை பரிசீலிக்கப்படுகின்றன.

(உ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடியவுள்ள நிதி ஆண்டிற்குரிய வரவு-செலவு கணக்குகள் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் தேதிமுதல் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதிவரையுள்ள நாட்களில் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, தணிக்கையாளர்கள் முன்னறிவிப்பு கொடுத்து தணிக்கை செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு செல்வதால் அவர்கள் கணக்கு வகைகளை சரிப்படுத்துவதற்கு வாய்ப்பாக இது அமைகிறது. ஆகவே, முன்னறிவிப்பு இன்றி, திடீரென தணிக்கை செய்ய அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்வது, போன ஆண்டிலே நடைபெற்று, முடிந்ததைப் பற்றிதான். முன் அறிவிப்பு கொடுத்ததனாலேயே இருக்கிற கணக்குகளை திருத்திவிட முடியுமா? திடீரென்று நடைமுறையிலே இருக்கிற கோளாறுகளைக் கண்டுபிடிக்கத்தான் முன் அறிவிப்பு இல்லாமல் செல்வது உண்டு. ஆடிட்டுகளிலே முன் அறிவிப்பு கொடுக்காமல் சென்றால், கணக்குகளை எல்லாம் சமர்ப்பிக்க முடியாது, விதிமுறைகளும் இடம் கொடுக்காது. ஆண்டாண்டு காலமாக, அங்கே மட்டுமல்ல, மாநில அளவிலே மத்திய அளவிலே நோட்டீஸ் கொடுத்துத்தான், தவணை கொடுத்துத்தான் தணிக்கை செய்யப்படுகிறது. அதிலே முறைகேடு எதுவும் இல்லை, மாற்றுகிற உத்தேசமும் இல்லை.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்: வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்து தணிக்கையாளர் குறிப்புகளை எழுதி இருக்கிறார்கள். ஒழுங்கீனங்களைப்பற்றியும் மற்ற விஷயங்களைப்பற்றியும் குறிப்புகள் எழுது

கிறார்கள். இம்மாதிரி எழுதப்பட்ட குறிப்புகள்மீது பஞ்சாயத்து யூனியன்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றன. அம்மாதிரி குறிப்புகள்மீது நடவடிக்கை கண்டிப்பாக எடுப்பதற்கு ஒரு உத்தரவை அரசு தரப்பிலிருந்து பிறப்பித்து, வரவு-செலவைக் கணிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: அப்படி எழுதப்படுகிற குறிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கவனத்திற்கு சுட்டிக்காட்டப்பட்டதனுடைய அடிப்படையில் விரைவாக அவைகளை முடிவு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கைத் தரவேண்டுமென்றும் குறைகள் நிவாத்திக்கப்படவேண்டுமென்றும் அவ்வப்போது கட்டளைகள் பிறப்பிக்கப்படுள்ளன. வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

Collection bonus system

* 367 Q.—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether collection bonus system has been introduced in the State Transport Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை. (இ) இவ் வினாவுக்கு இடம் இல்லை.

திரு. கே. விநயகம்: தேசியமயமாக்கிய இந்தத் துறையிலே போதிய அளவுக்கு நமக்கு வரவேண்டிய வருவாய் வருவதில்லையென்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் வசூல் பூரிப்பூதியம் வழங்கும் திட்டம் பற்றியது.

திரு. கே. விநயகம்: அதற்குத்தான் வருகிறேன். 'ஐ எம் கமிங் டு தி பாயின்ட்'. மற்றவர்கள், தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவர்களுக்கு அதிகமாக 'கலெக்ஷன்' வருகிறது. நமது பஸ்கள் போகிற இடத்திலே 'கலெக்ஷன்' வராமல் இருக்கிறது. அதற்காகத்தான், ஊக்கப்படுத்துவதற்குத்தான் 'போனஸ்' தரலாம் என்ற ஆலோசனையை எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளும் கட்சிக்காரர்களும் சொன்னார்கள். இது அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கும்போது ஏன் கை விடப்பட்டது? புதிதாக வந்திருக்கிற அமைச்சரவர்கள், இதை யோசித்து ஆரம்பித்துப் பார்த்து, நல்ல முறை என்று ஏற்றுக்கொண்டு, அமுல் படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தமிழக அரசுக்கு போக்குவரத்துத் துறையில் இழப்பு ஏற்பட்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் இந்த ஊக்க போனஸ் கொடுப்பதில் பற்பல சிக்கல்கள், பிரச்னைகள் ஏற்படுகின்றன. முதலாவது, ஊக்க போனஸ் கொடுப்பது என்றால் வசூல் செய்கிற கண்டக்டருக்கு மட்டும் கொடுப்பதா, டிரைவருக்கும் சேர்த்து கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. இரண்டாவது, வசூல் தொகையின் அடிப்படையில் கொடுப்பதா, அல்லது எத்தனை டிக்கட்டுகள் விற்கப்பட்டன என்ற அடிப்படையில் கொடுப்பதா என்ற சிக்கலும் இருக்கிறது. வசூல் அடிப்படையில் கொடுப்பதானால், நாள்படி வசூலில் கொடுப்பதா, வாரப்படி வசூலில் கொடுப்பதா, மாதப்படி வசூலில் கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. நாள்படி வசூலில் கொடுக்கலாம் என்றால் செவ்வாய்க்கிழமை வசூல் குறைவாக இருக்கிறது. வாரத்தின் அடிப்படை